















# ஃப்ளேயர்ட் குர்த்தா

**நீங்க குர்தா அணியறத விரும்பறவரா இருந்தா அல்லது அது பிடிச்ச ஒருத்தர் உங்க நண்பரா இருந்தா, நிச்சயமா இந்த வீடியோ உங்களுக்கானதுதான்!**

## தேவைப்படும் பொருள்கள்

45 ”அகலமுள்ள 5 மீட்டர் துணி
www.ushasew.comங்கற எங்க வலைதளத்துலேந்து ஃப்ளேயர்ட் குர்த்தாவுக்கான டெம்ப்ளேட்டை நீங்க பதிவிறக்கம் செய்துக்கலாம்.
சாக்
கத்தரிக்கோல்
ரூலர்
ஒரு அங்குல ஆயத்த பயாஸ் ஸ்ட்ரிப்
மணிகள் கொண்ட பின்கள்
ஒரு 9 அங்குல கன்சீல்டட் ஜிப்பர்

ஒரு சுலபமான நல்ல ஃப்ளேயர்ட் குர்த்தா தைக்க, டெம்ப்ளேட்படி துணிய கட் பண்ணணும் அவ்வளவுதான், டார்சோ துண்டுகளை வெட்டணும், கைகளை இணைக்கணும், அதை முன்பக்கமாவும் பின்பக்கமாவும் பாவாடையோட சேர்க்கணும், பக்கவாட்டு சீம்களை தைக்கவும், ஜிப்பர் இணைக்கணும், ஹெம்மிங் பண்ணி முடியுங்க, அவ்வளவுதான்.

## ஸ்டெப் 1: டெம்ப்ளேட் மார்கிங் மற்றும் வெட்டுதல்


உங்களுக்கு பிடிச்ச துணிய மேஜைக்கு வலப்பக்கம் விரிக்கறதோட இதைத் தொடங்குங்க. வீடியோல காட்டியிருக்கற மாதிரி உள்பக்கமா மேலேந்து கீழா மடியுங்க. இதன் நடுப்பகுதி ரொம்ப சரியா துணியின் மையப்பகுதிக்கு வர்றதை உறுதி செய்துக்கங்க. இப்ப, www.ushasew.com.லேந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட டெம்ப்ளேட்டுகளை வைக்கலாம்.


முதல்ல, துணியின் அடிப்பகுதியில டெம்ப்ளேட்டின் முன்பக்க மேல்பகுதிய வைக்கலாம். மடிப்புல டெம்ப்ளேட் எங்க இருக்குன்னு கவனிக்கறதுல விசேஷ கவனம் செலுத்தணும். டெம்ப்ளேட்ட மணிகள் கொண்ட பின்களை வெச்சு துணியோட சேர்த்து குத்தணும். துணியின் இன்னொரு பாதியில இதுல காட்டியிருக்க மாதிரி பின்பக்க டெம்ப்ளேட்ட வையுங்க. இதையும் சரியான எடத்தில வெச்சு பின் பண்ணனும். மற்ற டெம்ப்ளேட்களை பயன்படுத்தறதுக்கு முன்னால, ஒரு சாக்-ஆல பின் பண்ணப்பட்ட டெம்ப்ளேட்களை துணில மார்க் பண்ணிக்கணும். டெம்ப்ளேட்ல ஒரு சின்ன முக்கோணம் இருக்கறதை நீங்க கவனிச்சிருக்கலாம், நாம இதையும் முக்கோணத்தின் அடிப்பகுதியில ரெண்டும் மேல்பகுதில ஒன்றாவும் மார்க் பண்ணிக்கலாம்.

பின்பக்க டெம்ப்ளேட்டுக்கும் இதே மாதிரி திரும்பவும் செய்யணும்.

இப்ப நாம டெம்ப்ளேட் பின்னை நீக்கிட்டு, மார்க் பண்ண எடங்களை கட் பண்ணனும். கை நடுக்கம் இல்லாம, கவனமா கட் பண்ணனும். இது முடிஞ்சதும், துணியின் முன், பின் பக்கங்கள் இந்த மாதிரி இருக்கும். இப்ப இதை தனியா வெச்சிட்டு மற்ற பாகங்களை கட் பண்றதுல கவனம் செலுத்தலாம்.









துணிய விரிச்சு, வீடியோட காட்டியிருக்கற மாதிரி முன் பக்கத்தை முன்பக்கம் பாக்கறா மாதிரி மடிச்சிக்கங்க. இப்ப பாவாடை டெம்ப்ளேட்ட துணி மேல வைக்கணும். பாவாடை துணிய குறுக்கால வைக்கணும் அப்பதான் மடிப்பை குறிக்கற பக்கம் துணி மடிப்போட அலைன்டா இருக்கும். அருமையாக சய்துட்டீங்க. இப்ப துணி மேல டெம்ப்ளேட்ட வெச்சு ட்ரேஸ் பண்ணனும். இதை செய்த பிறகு, டெம்ப்ளேட்ட எடுத்துட்டு கத்திரிக்கோல வெச்சு மார்க் பண்ண எடங்களை கட் பண்ணுங்க. பாவாடை துண்டு பாக்க இந்த மாதிரி இருக்கணும்.

நாம இன்னொரு பாவாடை துண்டை கட் பண்ணனும். இந்த ரெண்டு துண்டுகள்தான் பாவாடையோட பின், முன் பக்கங்களா இருக்கும்.

அடுத்து, மீதி உள்ள துணிய எடுத்துக்கணும், இங்க காட்டி உள்ளபடி முன் பக்கம் முன்பக்கம் நோக்கியுள்ளபடி மடிச்சு, அதுக்கு மேல கை டெம்ப்ளேட்ட வையுங்க. மணி ஊசிகளை துணில பின் பண்ணி, சாக்-ஆல அதை மார்க் பண்ணுங்க. அதுக்கு முன்னால, டெம்ப்ளேட்லேந்து பின்களை எடுத்துட்டு மார்க் பண்ண லைன்ல கட் பண்ணனும். கட் பண்றப்ப கவனமா இருக்கணும் ஏன்னா இதுதான் ஃப்ளேயர்ட் குர்த்தா வடிவமைப்பு நல்லா வர்றதையும் இல்லை கெட்டுப்போறதையும் முடிவு செய்யும். இப்ப நாம கட் வேலை எல்லாம் முடிச்சிட்டோம்.

## ஸ்டெப் 2: மேல் டார்சோ தயார் செய்தல்




அடுத்த ஸ்டெப்புக்கு, டாப்-ன் முன், பின் பக்கங்களை எடுத்துக்கணும். அவற்றை மேஜை மேல உள்பக்கம் மேல இருக்கறபோல விரிக்கணும். முன்பக்க டெம்ப்ளேட்ட திரும்ப எடுத்து இங்க காட்டியுள்ளதுபோல துணி மேல வைக்கணும். ஏற்கெனவே சொன்ன முக்கோணங்கள் நினைவு இருக்கா? அவைதான் மையப் புள்ளிங்க. இப்ப நாம அவற்றை மார்க் பண்ணிக்குவோம். முன்பக்க துணியின் ரெண்டு பாதிலயும் மார்கிங்க உருவாக்கிக்கணும், கீழ்ப்பகுதில ரெண்டு நோட்ச் மேல்பக்கம் ஒன்னு. டார்ட்டுகள தைக்க இந்தப் புள்ளிகளை ஒரு ரூலரை பயன்படுத்தி முக்கோணமா இணைக்கணும். பின்பக்க துண்டுக்கும் இதே செயல்முறைய திரும்பவும் செய்யணும். டார்ட்டுகளை உருவாக்க பின் யோக் டெம்ப்ளேட்ட பயன்படுத்தணும். ரெண்டு பாதிலயும் முக்கோண புள்ளிகளை மார்க் பண்ணி ஒரு ரூலரை பயன்படுத்தி அவற்றை இணைக்கணும்.






எல்லாம் தயாரானதும், கட் பண்ணின துண்டுகளை உங்க உஷா வொண்டர் ஸ்டிட்ச் பிளஸ் தையல் இயந்திரத்திற்கு எடுத்துட்டுப் போங்க. துணியின் முன்பக்க பீசை எடுத்து ரெண்டு முக்கோண புள்ளிங்க மார்க்கிங்க பயன்படுத்தி பேஸ்ல பொருந்தறா மாதிரி வரையப்பட்ட எடத்தை வீடியோல காட்டி இருக்கற மாதிரி பின் பண்ணுங்க. முக்கோணத்தின் மேல்பக்கத்தை பிரஸ்ஸர் ஃபூட்டால அலைன் பண்ணுங்க. பேட்டன் செலக்டார் டயலை A லவும் தையல் நீளத்தை 3-ஆவும் செட் பண்ணி கோடு மேல தையுங்க. தையல் பிரியாம இருக்கறதை உறுதி செய்துக்க தையல் ஆரம்பத்துலயும் முடிவுலயும் ரிவர்ஸ் தையல பயன்படுத்த மறந்துராதீங்க. இன்னொரு பாதில உள்ள இனனொரு முக்கோணத்துலயும் இதே செயல்பாட்டை திரும்பச் செய்யணும். அதிகப்படியா உள்ள நூலை கட் பண்ணுங்க, இப்ப உங்க முன்பக்க டார்ட்டுகள் தயார்.


































இப்ப பின்பக்கத்துக்கு டார்ட்டுகளை உருவாக்கணும். துணியோட அடிப்பகுதில உருவாக்கப்பட்ட முக்கோணத்தை பின் பண்ணி தையுங்க, அவ்வளவுதான். இன்னொரு பாதிலயும் இதே போல செய்யுங்க. அதிகப்படியா உள்ள எல்லா நூலையும் கட் பண்ணுங்க. வேலை முடிஞ்சிருச்சு.

முன்னாலயும் பின்னாலயும் உங்க டார்ட்டுகள் பாக்க இப்படி இருக்கணும்


இப்ப நாம ரெண்டு துண்டுகளையும் ஒன்றா சேர்த்து தைக்கணும். எல்லாத்தையும் இன்னொரு தடவை பாக்கலாம், இதுதான் துணியின் பின்பகுதி, இதுதான் சரியான பக்கம். ரெண்டு துணியையும் ஒன்னு மேல ஒன்னா சரியான பக்கம் சரியான பக்கத்தை நோக்கியுள்ளபடி வையுங்க, மணி வெச்ச பின்னால ரெண்டுத்தையும் பின் பண்ணுங்க, சரியான எடத்துல பொருந்தறா மாதிரி பின் பண்ணினதுக்கு அப்புறம் துணிய உஷா தையல் மிஷினுக்கு கொண்டு போங்க. தோள்பட்டைகளை முதல்ல தைக்க ஆரம்பிக்கணும்.

துணிய பிரஸ்ஸர் ஃபூட்டால அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க, ஒண்ணு ரெண்டு தையலுக்கு அப்புறம் ரிவர்ஸ் தையல் போட்டு தொடர்ந்து தையுங்க. இன்னொரு தோள்பட்டையையும் தையுங்க.

தெச்சு முடிச்ச பிறகு, அதிகப்படியான எல்லா நூலையும் கட் பண்ணிருங்க. ரொம்ப கவனமா இருக்கணும், நீங்க தைச்சது பாக்க இப்படி இருக்கணும்.

## ஸ்டெப் 3: நெக்லைனை தைத்து முடித்தல்

இப்ப நெக்லைனுக்கு போகலாம். இதுக்கு ஒரு எலவேட்டட் பினிஷ் குடுக்க, தைக்கும்போது நாம ஒரு நீல பயாசை சேர்க்கலாம். இதைச் செய்ய, ஒரு ரெடிமேட் பயாஸ் ஸ்ட்ரிப்ப எடுத்துக்கணும். நெக்லைனுக்கு பொருத்தமா அளந்து பயாஸ் ஸ்ட்ரிப்ப ஒரு அங்குலம் கூடுதலா எடுத்துட்டு அந்த அளவுல கட் பண்ணனும். டாப்-அ திருப்பிக்கணும் அப்ப சரியான பக்கம் வெளிப்புறமா வந்திரும், ரிப்பன்ல ஏதாவது மடிப்பு இருந்தா அதைப் பிரிச்சு, சரியா பாதியா மடிங்க. மடிக்கப்பட்ட பயாஸ் ஸ்ட்ரிப் நெக்லைனுக்கு விளிம்புல அலைன் பண்ணப்பட்டு இருக்கறதை உறுதி செய்துகிட்டு அதை நெக்லைனுக்கு சரியான பக்கத்தில தைக்கத் தொடங்குங்க. உபரியா உள்ள ஸ்ட்ரிப்ப கட் பண்ணிருங்க. அடுத்த ஸ்டெப்புக்கு, பயாஸ் ஸ்ட்ரிப்ப மடியுங்க. இங்க காட்டியிருக்கறபடி இந்த ஸ்ட்ரிப்புக்கு டாப் தையல் போடுங்க. அடுத்த கட்டத்துக்கு பயாஸ் ஸ்ட்ரிப்ப உள்பக்கம் நோக்கி மடிச்சு, மடிப்பு மேல தையுங்க. இது கொஞ்சம் சிக்கலா இருக்கலாம், ஆனா இதை செய்து முடிச்ச பிறகு பாக்க அருமையா இருக்கும். நீங்க தைச்சு முடிச்ச நெக்லைன் பாக்க இப்படி இருக்கணும்.









## ஸ்டெப் 4: கைகளை இணைத்தல்

இப்ப நாம டாப்ல கைகளை இணைக்கற வேலைய பாக்கலாம். கைகளுக்கான துண்டுகளை எடுங்க, பாதியா மடிங்க இதுல காட்டி இருக்க மாதிரி மையப் புள்ளில நோட்ச்களை உருவாக்குங்க. இது முன்பக்கத்தில முன்பகுதில இணைக்கப்படற முன்பக்கமா, பின்பக்கத்தில இணைக்கப்படற பின்பக்க பீசாவும் இருக்கும். தோள்களோட ஸ்லீவோட மையத்தை வீடியோல காட்டி உள்ளபடி பொருத்தணும் அப்றம் அவற்றை சரியான எடத்தில பொருத்திவைக்க ஒன்றா சேர்த்து பின் பண்ணனும். ஸ்லீவ் முழுவதும் பின் பண்ணுங்க. நாம துணியை திருப்பி வெச்சு எல்லாம் செய்துட்டு இருக்கறதையும், சரியான பக்கத்தில இன்னும் எதுவும் செய்யலேங்கறதையும் கவனிக்கணும். இன்னொரு ஸ்லீவ்லவும் இதையே திரும்பவும் செய்யணும் - மாட்ச் பண்ணி பின் பண்ணுங்க. இப்ப இவற்றை ஒன்னு சேர்த்து தைக்கணும். பிரஸ்ஸர் ஃபூட்டோட விளிம்புல துணிய அலைன் பண்ணி தைக்கத் தொடங்குங்க, தைச்சிட்டே போகறப்ப பின்களை நீங்கிட்டே வரணும். அதிகப்படியான நூலை வெட்டிறணும் அதே மாதிரி இன்னொரு ஸ்லீவையும் இணைங்க.

இது பாக்க அற்புதமா இருக்குல்ல? பாதி விஷயம் முடிஞ்சிருச்சு.









## ஸ்டெப் 5: பாவாடைப் பகுதியை இணைத்தல்

பாவாடைய இணைக்கற நேரம், குர்த்தாவின் டாப் பகுதிய பிரிச்சு, அதை வேற பக்கமா புரட்டுங்க, முன்பக்கம் கீழயும், பின்பக்கம் உங்களை நோக்கியும் இருக்கணும். பாவாடையோட முன்பக்கத்தை எடுத்து திருப்பிபோடுங்க. வீடியோல காட்டின மாதிரி டாப்-ன் முன்பக்கத்தை பாவாடையின் முன்பக்கதோட சேர்த்து பின் பண்ணுங்க. அதே மாதிரி பாவாடையின் பின்பகுதிய டாப்-ன் பின்பக்கத்தோட பின் பண்ணுங்க.

இப்ப இவற்றை தைக்கணும். பிரஸ்ஸர் ஃபூட்டோட விளிம்புல துணிய அலைன் பண்ணி தைக்கத் தொடங்குங்க, தொடர்ந்து தெச்சிட்டே பின்களை அகற்றிட்டே வரணும். அடுத்த பக்கத்தையும் தைக்கணும். அதிகப்படியான நூலை வெட்டிறணும்.

















## ஸ்டெப் 6: பக்கவாட்டு சீமை முடிச்சு வெத்து ஜிப்பரை இணைக்கணும்

அடுத்தது, நாம பக்கவாட்டு சீம்ல கவனம் செலுத்தணும், அக்குள்லேந்து தொடங்கி குர்தாவின் அடிப்பக்கம் வரை நீளமா தைக்கணும். துணிய சரியான எடத்துல நகராம வைக்க அக்குள்ளேந்து பின்பண்ணிட்டே வரணும். ஸ்லீவ் டாப்-ஐ வந்தடையும் எடத்துக்கு வந்து சேர்ப்ப பாவாடைய நோக்கி ரெண்டு அங்குலத்துக்கு அளந்து மார்க் பண்ணிக்கங்க, இங்கதான் ஜிப் தைக்கப்படும். இங்க துணிய பின்பண்ணுங்க. பொருத்தமான ஜிப்பை வெளிய எடுத்து நீளத்தை அளந்து இங்க காட்டப்பட்டது போல ஜிப் முடியற எடத்துக்கு 11/2 அங்குலத்துல ஒரு மார்க்கிங்க உருவாக்கணும். அதை துணில பின் பண்ற நேரம், ஜிப்பின் முன்பக்கம் துணியின் சரியான பக்கத்தை நோக்கி இருக்கணும், அப்பதான் ஜிப்போட பின்பக்கம் உங்களை நோக்கி இருக்கும் , மணி பின்களால அதை சரியான எடத்தில பின் பண்ணுங்க. இது முடிஞ்ச பிறகு, முன்னால செய்ததைபோல தொடர்ந்து பின் துணிய ஒன்னு சேர்த்து பின்பண்ணுங்க.

அடுத்த பக்கமும் ஜிப்புக்கு இடம் குடுக்கறதை தவிர மற்றதெல்லாம் இதே மாதிரி செய்யணும். ஸ்லீவில பின் பண்ணத் தொடங்கி குர்த்தா வரை செய்யணும்.

இப்ப எல்லாத்தையும் உள்ள தைக்கணும். ஸ்லீவ் முடியற எடத்த பிரஸ்ஸர் ஃபூட்டால அலைன் பண்ணி தொடங்கிருங்க. தெச்சிட்டே போகறப்ப பின்களை நீக்கிட்டே வாங்க, அங்குள்ள, பிவோட் உத்திய பயன்படுத்துங்க அதாவது தொடர்ந்து தைச்சிட்டே போக ஊசிய அகற்றாமலே துணிய திருப்பற முறை இது. இது முழுவதும் ஒற்றை தையலா இருக்கறதை உறுதி செய்யும் பக்கவாட்டு சீமை ஒரு ரிவர்ஸ் தையலை போட்டு முடிங்க.

அடுத்த பக்கத்துக்கு, ஸ்லீவுக்கு பதிலா கீழே இருந்து தொடங்கி, ஜிப் வரை தொடர்ந்து தையுங்க. இப்போதைக்கு ஜிப்பர யோசிக்க வேணாம். ஜிப்பர் முடியற எடத்தில மறுபடியும் தொடங்கி, தொடர்ந்து மேல்நோக்கி தையுங்க.


இந்த வேலை முடிஞ்சதும், வழக்கமான பிரஸ்ஸர் ஃபூட்டுக்கு பதிலா ஜிப்பர் பூட்டை பயன்படுத்துங்க. இங்க காட்டியுள்ளபடி ஜிப்பரை தைக்கத் தொடங்குங்க. உள்ள ஜிப்பரை வெச்சு தைக்கறது கஷ்டமாதான் இருக்குங்கறதை நினைவு வெச்சிட்டு கூடுதல் கவனத்தோட இருங்க. ஜிப்பின் ஒரு பக்கத்தை துணி மேல தைக்கத் தொடங்கி இதே போல அடுத்த பக்கத்திலயும் தையுங்க. ஆனா இதோட விஷயம் முடிஞ்சிரல. ஜிப்பர் விளிம்புகளுக்கு இடையிலயும், ரெண்டு பக்கங்கள்லயும் உள்ள ஜிப்பர் பற்கள்லயும் தைக்கணும். முடிஞ்சவரை பற்களுக்கு நெருக்கமா பின்பக்கமா தையுங்க. இது முடிஞ்சதும், ஏற்கெனவே போட்ருக்கற கிடைமட்ட மார்க்கிங்ல ஜிப்பை வெச்சு தையுங்க.

இணைக்கப்பட்ட ஜிப்பர் பாக்க இந்த மாதிரி இருக்கணும். ரொம்ப சரி!











## ஸ்டெப் 7: ஸ்லீவ் ஹேம், கீழ் ஹேம் இரண்டையும் தைத்து முடித்தல்.

இப்ப ஜிப்பர் ஃபூட்டை A ஃபூட்ட கொண்டு மாற்றுங்க, ஹெம் லைன முடிச்சு இந்த டிரஸ்ஸ நாம முடிச்சிரலாம்.

இதை ஸ்லீவ் ஹேமிலேந்து தொடங்கலாம், இதுல காட்டியுள்ளபடி ஸ்லீவை உள்பக்கமா அரை அங்குலம் மடியுங்க. வட்ட ஹெம்களை சுலபமா தைக்க மிஷினின் ஆக்சசரி பெட்டிய எடுத்துருங்க, ஸ்லீவ சுற்றி முழுவதும் தையுங்க. இன்னொரு பக்கத்திலயும் இதையே திரும்பச் செய்யணும். ரெண்டு தடவை மடிச்சு தையுங்க.

இப்ப இறுதி ஸ்டெப்புக்கு. நாம கீழ் ஹெம்-அ முடிக்கணும். அப்படியே ஸ்லீவ் போலவேதான், அரை அங்குலத்துக்கு துணிய ரெண்டு தடவை மடிச்சு தைக்கத் தொடங்குங்க. இதையே மொத்த குர்தாக்கும் செய்யணும். அவ்வளவுதான் வேலை முடிஞ்சிருச்சு!

உள்பக்கம் மேல இருக்கற மாதிரி மடியுங்க இப்ப ஃப்ளேயர்ட் குர்த்தா தயார்! இது பாக்க அற்புதமா இருக்கு. இதை நாம பொருத்தமா ப்ரோச் வெச்சு அழகுபடுத்தலாம். நீங்களே சொந்தமா ட்ரை பண்ணப் பாருங்க. துணிகளோடு புகுந்து விளையாடி தலைசிறந்த படைப்புகளை உருவாக்குங்க. என்ன நினைக்கறீங்க? கீழ உள்ள விமர்சன பகுதியில அதை தெரிவியுங்க. லைக் பண்ணுங்க, ஷேர் பண்ணுங்க சப்ஸ்கிரைப் பண்ணுங்க.